முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை – 2017 சனவரி

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

(Business operations and management)

2017-01-29
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) *பரீட்சைக்கு விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே*** *உங்களுக்குத் தரப்பட்ட* ***விடைப்புத்தகத்தில் விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *உங்களால் ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* **செயல் வினைச்சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.15*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை வினா இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்ட விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் முகாமைச் செயன்முறையுடன் தொடர்புடையது எது?

(1) திட்டமிடல், உற்பத்தி, வழிகாட்டல் மற்றும் தொடர்பாடல்

(2) திட்டமிடல், நோக்கங்கள், கட்டளையிடலின் ஓரினத்தன்மை மற்றும் நிறுவனக் கட்டமைப்பு

(3) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிகாட்டல் மற்றும் கட்டுப்படுத்தல்

(4) திட்டமிடல், கட்டளையிடலின் ஓரினத்தன்மை, வழிகாட்டல் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு

**1.2** தனியுரிமை வியாபாரம் ஒன்றுடன் ஒப்பிடுகையில் பங்குடமை வியாபாரம் ஒன்றில் காணப்படும் விசேட அனுகூலம்,

(1) இடர் பகிரப்படுதல்    (2) விரைவாகத் தீர்மானமெடுத்தல்

(3) வரையறையற்ற பொறுப்பு    (4) கட்டாயக் கணக்கீடு

**1.3** பின்வருவனவற்றுள் இலங்கையில் அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கி (licensed specialized bank) எது?

| | |
|---|---|
| (1) ஹற்றன் நஷனல் வங்கி | (2) இலங்கை வங்கி |
| (3) தேசிய சேமிப்பு வங்கி | (4) மக்கள் வங்கி |

**1.4** பின்வரும் கூற்றுக்களுள் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள் தொடர்பில் **தவறான** கூற்று எது?

(1) ஆகக்குறைந்த பங்குதாரர்களின் எண்ணிக்கை 01 ஆகும்.

(2) ஆகக்கூடிய பங்குதாரர்களின் எண்ணிக்கை 50 ஆகும்.

(3) ஆகக்குறைந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கை 02 ஆகும்.

(4) வருடாந்த அறிக்கையை வெளியிடுவது கட்டாயமானதாகும்.

**1.5** பின்வருவனவற்றுள் போட்டரின் ஐந்து படைகள் மாதிரியின் (Five Forces Model) ஓர் அங்கமாக **அமையாதது** எது?

| | |
|---|---|
| (1) புதிய பிரவேசிப்பாளர்களின் அச்சுறுத்தல் | (2) வழங்குநர்களின் பேரம்பேசும் பலம் |
| (3) ஊழியர்களின் பேரம்பேசும் பலம் | (4) வாங்குபவர்களின் பேரம்பேசும் பலம் |

**1.6** பின்வருவனவற்றுள் தொக்கு முகாமைத்துவம் தொடர்பில் சரியான கூற்று எது?

(1) இது வாடிக்கையாளர் கேள்வியை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுகிறது.

(2) இது பேணப்படவேண்டிய மற்றும் கட்டளையிடப்பட வேண்டிய இருப்பின் அளவைத் துணிவதற்கு உதவுகிறது.

(3) இது தொக்கின் கிரய விளைவுத்திறனுக்கு (cost effectiveness) உதவுகிறது.

(4) மேலுள்ள யாவும்.

**1.7** பின்வருவனவற்றுள் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் ஒன்றுக்கான தரப் பரிமாணமாக (quality dimension) **அமையாதது** எது?

| | |
|---|---|
| (1) பண்புக்கூறு (feature) | (2) துல்லியத்தன்மை (accuracy) |
| (3) நம்பகத்தன்மை (reliability) | (4) நீடித்துழைக்கும் தன்மை (durability) |

**1.8** கடமைகள் மற்றும் நோக்கெல்லையின் எண்ணிக்கை அதிகரிப்புடன் தொழில் ஒன்றை வடிவமைப்பது எவ்வாறு அடையாளப்படுத்தப்படுகிறது?

| | |
|---|---|
| (1) தொழில் விரிவாக்கம் (Job enlargement) | (2) தொழில் சுழற்சி (Job rotation) |
| (3) தொழில் மேம்பாடு (Job enrichment) | (4) தொழில் குறிப்பீடு (Job specification) |

**1.9** பின்வருவனவற்றுள் எதிர்வுகூறப்படும் மனித வளங்களின் கேள்விக்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு நுட்பம் (technique) எது?

| | |
|---|---|
| (1) பிரதியீட்டு அட்டவணைகள் | (2) ஊழியரிடல் அட்டவணைகள் |
| (3) போக்குப் பகுப்பாய்வு | (4) திறன் இருப்புகள் |

**1.10** பின்வருவனவற்றுள் மனித வள முகாமைத்துவ நோக்கெல்லைக்குள் **உள்ளடக்கப்படாத** விடயம் எது?

(1) ஆளணி விடயம் (2) நலன்புரி விடயம்

(3) உற்பத்தி விடயம் (4) கைத்தொழில் உறவுகள் விடயம்

**1.11** பின்வருவனவற்றுள் "சந்தைப்படுத்தல் தத்துவத்துடன்" தொடர்புடைய தந்திரோபாயம் எது?

(1) ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் திட்டங்கள்

(2) ஆக்கிரமிப்பு விற்பனை மற்றும் ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள்

(3) உயர் உற்பத்தியூடாக உயர் இலாபம்

(4) வினைத்திறன்மிக்க உற்பத்தி அதிகரிப்பு

**1.12** சீரான தன்மை அல்லது ஒருவகைப்பட்ட சந்தைப்படுத்தல் நடவடிக்கைக்குப் பிரதிபலிப்பைக் காட்டுவதன் அடிப்படையில் சந்தையைத் தெளிவான துண்டங்களாகப் பிரித்தல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) சந்தை துண்டப்படுத்தல் (market segmentation)

(2) இலக்குச் சந்தைப்படுத்தல் (target marketing)

(3) சந்தை நிலைப்படுத்தல் (market positioning)

(4) சூழ்நிலைச் சந்தைப்படுத்தல் (niche marketing)

**1.13** பின்வருவனவற்றுள் இருந்து உற்பத்திப்பொருள் சந்தைப்படுத்தல் கலவையைத் (product marketing mix) தெரிவுசெய்க :

(1) உற்பத்திப்பொருள், விலை, ஊக்கப்படுத்தல், மக்கள்

(2) உற்பத்திப்பொருள், விலை, ஊக்கப்படுத்தல், இடம்

(3) உற்பத்திப்பொருள், விலை, செயன்முறை, இடம்

(4) உற்பத்திப்பொருள், மக்கள், செயன்முறை, பௌதிகச் சான்றுகள்

**1.14** பின்வருவனவற்றுள் எது ஒரு நிலைப்படுத்தல் (Positioning) அணுகுமுறை / தந்திரோயாயம் ஆகும்?

(1) பெறுமதி (Value) நிலைப்படுத்தல்

(2) பொருள் வகுப்பு (Product class) நிலைப்படுத்தல்

(3) பாவனையாளர் நிலைப்படுத்தல்

(4) மேலுள்ள சகலதும்

**1.15** பின்வருவனவற்றுள் கம்பனியொன்றின் நடவடிக்கையை வெளிமூலமிடுவதற்கான (outsourcing) ஒரு காரணமாக **அமையாதது** எது?

(1) தொழிற்பாட்டுக் கிரயத்தைக் குறைப்பதற்கு

(2) கம்பனியில் வளங்கள் காணப்படாமை

(3) பிரதான வியாபாரத்தின்மீது கவனத்தைக் குவிப்பதற்கு

(4) சந்தையில் பிரவேசிப்பதற்காக நேரத்தை அதிகரித்தல்

*1.16 முதல் 1.20 வரையுள்ள வினாக்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களிலிருந்து சரியானதைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட விடையை உங்களது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.16** நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக நோக்கங்களை அமைத்தல் மற்றும் செயற்பாடுகளின் தொகுதியை முடிவுசெய்தல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒரு முகாமைத் தொழிற்பாடு ........................ *(ஒழுங்கமைத்தல் / திட்டமிடல்)* ஆகும்.

**1.17** ........................ *(சிக்கனக் கட்டளைக் கணியம் / உரிய நேரத் (JIT) தொக்கு)* என்பது மொத்தத் தொக்குக் கிரயத்தை இழிநிலைப்படுத்துகின்ற உத்தமக் கட்டளை அளவாகும்.

**1.18** ........................ *(மனித வள முகாமை / சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை)* என்பது போட்டரின் பெறுமதிச் சங்கிலியால் அடையாளங்காணப்பட்ட ஒரு ஆதரவுச் செயற்பாடு ஆகும்.

**1.19** சூழல் அல்லது நிறுவனம் பற்றிய மூல விடயங்கள் மற்றும் இலக்கங்கள் (Raw facts and figures) ........................ *(தகவல் / தரவு)* என அழைக்கப்படுகிறது.

**1.20** ........................ *(வேறுபடுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் / வேறுபடுத்தப்படாத சந்தைப்படுத்தல்)* என்பது ஒரு குறிப்பிட்ட சந்தைத் துண்டமொன்றின் இலக்கு அல்ல.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

வியாபார நிறுவனங்களை உடைமை, நோக்கங்கள், அளவு போன்ற பல்வேறு கோட்பாடுகளுக்கு இணங்க வகைப்படுத்த முடியும். எவ்வாறாயினும் வியாபார நிறுவனத்தின் தன்மையைப் பொருட்படுத்தாது, எந்தவொரு வியாபார நிறுவனமும் அதனுடைய செயற்பாட்டு நடவடிக்கைகளை நடத்திச்செல்வதற்கு ஆதரவுச் சேவைகள் இன்றியமையாததாக இருக்கின்றன. நிதிச் சேவைகள், போக்குவரத்து, தொடர்பாடல், காப்புறுதி மற்றும் பண்டசாலை என்பன ஒரு வியாபார நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கின்ற பிரதான ஆதரவுச் சேவைகளாகும்.

(a) பங்குடமை மற்றும் பரிப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஆகியவற்றுக்கிடையில் வேறுபாடுகள் நான்கினைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(b) ஒரு வியாபார நிறுவனத்திற்கான நல்ல போக்குவரத்து முறையின் முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

நிறுவனமொன்று கைமுறை முறைமையின் கீழ் செயற்பட்டுக்கொண்டிருந்த அதன் தகவல் முறைமையை தொழினுட்பவியல்ரீதியான ஒரு முறைமைக்கு மாற்றியிருக்கிறது. இம்மாற்றமானது நிறுவனத்திற்கு பல அனுகூலங்களைக் பெற்றுத்தந்திருக்கிறது. தகவல் முறைமையை மேம்படுத்துவதில் உலகமயமாக்கல்கூட தாக்கஞ் செலுத்தியிருக்கிறது.

(a) தகவல் முகாமைத்துவத்திற்கு தொழினுட்பவியல் முறைமையொன்றைப் பயன்படுத்துவதிலுள்ள அனுகூலங்கள் ஐந்தினைப் (05) **பட்டியலிடுக**. (05 புள்ளிகள்)

(b) இலத்திரனியல் வர்த்தகம் (E-commerce) எவ்வாறு ஒரு வியாபார நிறுவனத்திற்கு உதவியாக இருக்கிறது என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

நிறுவனத்திலுள்ள பணி வெற்றிடங்களுக்காக, தகைமையுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து ஒரு மக்கள் தொகுதியைத் தேடும் அல்லது கவரும் செயன்முறை ஆட்சேர்ப்பு என அறியப்படுகிறது. ஒரு தடவை ஆற்றல்மிகு பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டு ஆட்சேர்க்கப்பட்டதும் அவர்கள் கம்பனியின் ஊழியர்களாக மாறுகின்றனர். அவ்வூழியர்கள் தமது கடமைகளை பயனுறுதிமிக்க வகையில் ஆற்றுவதை இயலச் செய்வ தற்காக அவர்களுக்கு பயிற்சியளித்து விருத்தியடையச்செய்வது தொழில் வழங்குநரின் கடமையாகும்.

(a) ஒரு முறைமைசார் ஆட்சேர்ப்புச் செயன்முறையுடன் (recruitment process) சம்பந்தப்பட்ட படிநிலை களை (steps) **அடையாளங்காண்க.** (05 புள்ளிகள்)

(b) ஊழியர்களின் விளைவுத்திறன்மிக்க பயிற்சியிலிருந்து நிறுவனமொன்றுக்குக் கிடைக்கக்கூடிய நன்மை களைக் **கலந்துரையாடுக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் திருப்தி செய்கின்ற செயன்முறை சந்தைப்படுத்தல் ஆகும். வணிகக்குறியிடல் சந்தைப்படுத்தலில் ஒரு பாரிய பங்கினை வகிக்கிறது.

(a) வணிகக்குறியிடலின் (branding) அனுகூலங்கள் நான்கினைக் (04) குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(b) சந்தைப்படுத்தலிலுள்ள பின்வரும் பதங்களை **விபரிக்குக.**

(i) சந்தை வழங்கல் / பொருள் (Market offering / product)

(ii) இலக்குச் சந்தைப்படுத்தல் (Target Marketing) (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட மரியோ பிஸ்கட் கம்பனி** 1970 இல் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாக வெற்றிகரமாக இயங்கிவருகின்ற இலங்கையிலுள்ள ஒரு முன்னணி பிஸ்கட் உற்பத்தியாளராகும். இந்தக் கம்பனி கடந்த ஐந்து வருடங்களில் உயர்ந்த ஐந்து பிஸ்கட் உற்பத்தியாளர்களில் ஒருவராகத் திகழ்கிறது. மூன்று மாதங்களுக்கு முன், கம்பனியின் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக (CEO) **தோமஸ்** நியமிக்கப்பட்டுள்ளார்.

**வரையறுக்கப்பட்ட மரியோ பிஸ்கட் கம்பனியானது,** விசேடமாக வெவ்வேறு சுவைகளையுடைய பிஸ்கட்டு களுக்காக குழந்தைகள் மத்தியில் பிரபல்யம் பெற்ற ஒரு கம்பனியாகும். கம்பனித் தொழிற்சாலை ஆறு மாதங்களுக்கு முன்னர் 60 வயதை அடைந்ததன் காரணமாக கம்பனியிலிருந்து ஓய்வுபெற்ற நன்கு அனுபவமுடைய தொழிற்பாட்டு முகாமையாளர் (operations Manager) ஒருவரால் இயக்கப்பட்டிருந்தது. தற்போது பணி மாற்ற அடிப்படையில் (shift basis) ஏறத்தாழ 3,000 பணியாளர்கள் தொழிற்சாலையில் வேலை செய்கின்றனர்.

கடந்த ஆறு மாத காலப் பகுதியில் நாளொன்றின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மணித்தியாலங்கள் சில உற்பத்திப் பொறிகள் இயக்கப்படாது சும்மா இருந்ததையும் உற்பத்தி மற்றும் விற்பனைகள்கூட கடந்த ஆறு மாத காலப்பகுதியில் சரிவடைந்திருந்ததையும் **தோமஸ்** அவதானித்திருந்தார். பெரும்பாலான பகுதிகளிலிருந்து கிடைக்கும் மோசமான சமிக்ஞைகள் காரணமாக, புதிய CEO, சந்தை ஆய்வொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்திருந்தார். அச்சந்தை ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியிருந்தது :

- இதேபோன்ற சுவைகளுடன் குழந்தைகளுக்கான பிஸ்கட்டினைத் தயாரிக்கின்ற ஒரு புதிய போட்டியாளர் சந்தையில் பிரவேசித்துள்ளார்.
- கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக, விற்பனை படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளது.
- கடந்த 5 ஆண்டுகளில் கம்பனியின் சந்தைப் பங்கு 22% இலிருந்து 18% ஆகக் குறைவடைந்துள்ளது.
- வரிகள் காரணமாக உற்பத்திப் பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்திருக்கின்றன.
- மேலுள்ள விடயங்கள் காரணமாக காலப்பகுதியில் கம்பனியின் இலாப எல்லை கடுமையாகச் சரிவடைந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, ஊழியர் சங்கம் புதிய CEO உடன் கலந்துரையாடி சில மனக்குறைகளைத் தெரிவித்திருந்தது. குறைந்த சம்பளங்கள் மற்றும் ஏனைய நன்மைகள், பதவியுயர்வுகள், செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் வெகுமதிகள் கிடைக்காமை போன்றவற்றால் ஏற்படும் தொழில் திருப்தியின்மை காரணமாக பெரும்பாலான ஊழியர்கள் கம்பனியிலிருந்து விலகிக்கொள்கிறார்கள் என்பதையும் ஊழியர் சங்கம் எடுத்தியம்பியிருந்தது.

இப்பிரச்சினைகளை நிவர்த்திக்கும் பொருட்டு, CEO கம்பனிக்கு தொழிற்பாட்டு முகாமையாளர் ஒருவரை உடனடியாக ஆட்சேர்ப்புச் செய்தார். அத்துடன் உடனடியாகவே பயனுறுதிமிக்க செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையொன்றை வடிவமைத்து நடைமுறைப்படுத்துமாறும் அவருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி **வரையறுக்கப்பட்ட மரியோ பிஸ்கட் கம்பனியின்** தொழிற்பாடு களுக்கு சூழலினால் ஏற்படுத்தப்படும் தாக்கத்தை **மதிப்பிடுக.** (08 புள்ளிகள்)

(b) குறித்த இக்கம்பனியின் தொழிற்பாட்டு முகாமையாளரது வகிபாகத்தை **அடையாளங்காண்க.** (08 புள்ளிகள்)

(c) பயனுறுதிமிக்க செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமை ஒன்றின் சிறப்பியல்புகள் (features) நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக. (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |